KAYALPATTINAM MUNICIPALITY

FORM 3

Minutes of the Meeting held on 30.09.2010

<table>
<tr><th>Date of the Council Meeting</th><th>Decision Number</th><th>Subject of the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td>30.09.2010</td><td>772</td><td>பொருள் எண்: 1<br>காயல்பட்டிணம் மூன்றாம்நிலை நகராட்சியில் ஜூலை - 2010 மற்றும் ஆகஸ்ட் - 2010ம் மாதத்தில் கீழ்க்கண்டுள்ள பிறப்பு, இறப்புகளை பதிவு செய்தது மன்றம் அங்கீகாரத்திற்கு.
<table>
<tr><th colspan="4">ஜூலை - 2010</th><th colspan="4">ஆகஸ்ட் - 2010</th></tr>
<tr><th colspan="2">பிறப்பு</th><th colspan="2">இறப்பு</th><th colspan="2">பிறப்பு</th><th colspan="2">இறப்பு</th></tr>
<tr><td>ஆண்</td><td>20</td><td>ஆண்</td><td>6</td><td>ஆண்</td><td>40</td><td>ஆண்</td><td>17</td></tr>
<tr><td>பெண்</td><td>14</td><td>பெண்</td><td>6</td><td>பெண்</td><td>33</td><td>பெண்</td><td>6</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>34</td><td>மொத்தம்</td><td>12</td><td>மொத்தம்</td><td>73</td><td>மொத்தம்</td><td>23</td></tr>
</table>
செயல் அலுவலர் குறிப்பு:<br>பிறப்பு, இறப்புகளை பதிவு செய்ததை பார்வையிட்டு மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td>அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>773</td><td>பொருள் எண்: 2:<br>காயல்பட்டணம் நகராட்சி 1-வது வார்டு கடையக்குடி பகுதி மனுவேல்விளை (சிங்காரவேலர் குடியிருப்பு காலனி) தார்சாலை பொதுநிதயில் இருந்து அமைத்துதர கேட்டுக் கொண்ட 1-வது வார்டு உறுப்பினர் திரு.தா.திருத்துவராஜ் அவர்கள் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும்<br>செயல் அலுவலர் குறிப்பு:<br>தலைவர் உறுபப்பினர் ஸ்தலப்பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி செய்திட மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td>அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 774 | **பொருள் எண்: 3**<br>காயல்பட்டணம் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை வரும் மாதங்களில் தொடங்க உள்ள நிலையில் மழைநீர் வடிகால் பகுதிகளை தூர்வாரவும், காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து மழைநீர் வடிகால் பகுதிகளை சீர்செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொண்ட நகர்மன்ற தலைவர் திரு. வாவு சா.செய்யிது அப்தூர் ரஹ்மான் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**செயல் அலுவலர் குறிப்பு:**<br>மழைநீர் வடிகால் பகுதிகளை தூர்வாரி சீர்செய்திட மன்றம் அங்கீகரிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 775 | **பொருள் எண்: 4**<br>காயல்பட்டணம் நகராட்சிப் பகுதியில் திரியும் தெரு நாய்களால் பொதுமக்கள் மற்றும் கால்நடைகள் மிகவும் பாதிப்புக்குள்ளாகின்றன ஆகவே தெருவில் சுற்றித் திரியும் நாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொண்ட நகர்மன்ற துணைத் தலைவர் திரு.M.A.கசாலிமரைக்கார் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br><br>**செயல் அலுவலர் குறிப்பு:**<br>நாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க மன்றம் தீர்மானிக்கலாம | அங்கீகரிக்கப்பட்டது |
| | 776 | **பொருள் எண்: 5**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் குடிநீர் விநியோத்தை சீர் செய்திடவும், குடிநீர் இணைப்புதாரர்கள் அனைவர்களுக்கும் குடிநீர் சீராக கிடைப்பதற்கும், மேலும் குறிப்பிட்ட நாட்களுக்கு மிகாமல் குடிநீர் கிடைத்திடவும் குடிநீர் விநியோகக்குழாய்களில் மின்மோட்டார்கள் இணைத்து குடிநீர் உறிஞ்சும் குடிநீர் இணைப்புதாரர்களை ஆய்வு செய்து கண்டறிந்து தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920-ன் கீழ் மின்மோட்டார்களை பறிமுதல் செய்வதுடன், ஆறுமாத காலம் குடிநீர் இணைப்பை துண்டிப்பு செய்து, ரூ.15000.00 அபராதம் விதிக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொண்ட நகர்மன்ற தலைவர் திரு. வாவு சா.செய்யிது அப்தூர் ரஹ்மான் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும். | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | **செயல் அலுவலர் குறிப்பு:**<br>குடிநீர் விநியோகத்தை சீர் செய்து அனைவருக்கும் குடிநீர் கிடைக்கும் பொருட்டு மின்மோட்டார் வைத்து குடிநீர் உறிஞ்சும் இணைப்புகளை ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| | 777 | **பொருள் எண்: 6**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளாகிய 1வது வார்டு கடையகுடி பகுதியை அப்பகுதியில் வசிக்கும் சில குறிப்பிட்ட மீனவர்கள் புனைப் பெயரை ஏற்படுத்தி கடையகுடியை கொம்புதுறை என்றும், 7வது வார்டு கற்புடையார்பள்ளி வட்டம் பகுதியை அப்பகுதியில் வசிக்கும் சில குறிப்பிட்ட மீனவர்கள் புனைப் பெயரை ஏற்படுத்தி கற்புடையார்பள்ளி வட்டம் பகுதியை சிங்கித்துறை என்றும், அழைத்துவந்தனர் இது நாளடைவில் இப்பகுதிகளை நகராட்சி ஆவணங்களில் இல்லாத மேற்கண்ட புனைபெயர்களையே பயன்படுத்தப்பட்டு, நகராட்சி ஆவணங்கள் தவிர்த்து மற்ற அரசு அனைத்துதுறை ஆவணங்களிலும் கடையகுடியை கொம்புதுறை என்றும், கற்புடையார்பள்ளி வட்டம் பகுதியை சிங்கித்துறை என்றுமே உள்ளது. ஆகவே நகராட்சி ஆவணங்களில் உள்ளது போன்று அப்பகுதிகளை கடையகுடி மற்றும் கற்புடையார்பள்ளி வட்டம் என அரசு அனைத்துதுறைகளிளும் கொம்புதுறை சிங்கித்துறை என்ற புனைப்பெயர்களை தவிர்த்து நகராட்சி ஆவணங்களின்படி திருத்தியமைக்க வேண்டுமாய் அரசின் அனைத்துதுறைகளையும் கேட்டுக் கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொண்ட நகர்மன்ற துணைத் தலைவர் திரு.M.A.கசாலிமரைக்கார் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br><br>**செயல் அலுவலர் குறிப்பு:**<br>நகராட்சி ஆவணங்களில் உள்ள பெயர்களை அரசின் அனைத்து துறை ஆவணங்களிலும் திருத்தம் செய்திட கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 778 | **பொருள் எண்: 7**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதி வடக்கு கோமான் புதூர் புதிதாக 3'' பைப்லைன் மற்றும் கோமான்புதூரில் மேல் பகுதி கடைசியில் புதிதாக மின் கம்பம் ஒன்று நட்டு தெரு விளக்கு வசதி செய்து தரவும் கேட்டுக் கொண்ட 18-வது வார்டு உறுப்பினர் திரு.S.காசிராஜன் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br><br>**செயல் அலுவலர் குறிப்பு:**<br>குடிநீர் குழாய் அமைத்திடவும் புதிதாக மின்கம்பம் நட்டு தெருவிளக்கு வசதி செய்திடம் மன்றம் தீர்மானிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 779 | **பொருள் எண்: 8**<br>நகராட்சிப் பகுதியில் பொதுநிதிப்பணிகள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டப் பணிகள், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 12வது நிதிக்குழு திட்டம் மற்றும் குடிநீர் திட்டப்பணிகள் மேலும் பல திட்டப்பணிகள் நடைபெற்று வருவதால் ஏற்கனவே காயல்பட்டிணம் நகராட்சியில் தொழில்நுட்ப உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு கே.செந்தில்குமார் என்பவரை 01.09.2010 முதல் 30.11.2010 வரை பணியமர்த்திக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>01.09.2010 முதல் 30.11.2010 வரை திரு கே.செந்தில்குமார் என்பவரை பணியில் அமர்த்திக் கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 780 | **பொருள் எண்: 9**<br>காயல்பட்டிணம் நகராட்சியில் திரு S.பால்ராஜ், 8, முத்துசாமிபுரம் ரோடு, கீழக்கரை என்பவர் ஒப்பந்தக்காரராக பதிவு செய்யப்பட்டுள்ளார் என்ற விபரம் மன்றத்தின் தகவலுக்கும், பார்வைக்கும்.<br>**செயல் அலுவலர் குறிப்பு:**<br>மன்றத்தின் பார்வைக்கு. | அங்கீகரிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>781</td>
<td>பொருள் எண்: 10<br>காயல்பட்டிணம் நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பதிவு செய்துள்ள திரு S.குமரேசன், திருச்செந்தூர் என்பவர் தனக்கு அரசு வேலை கிடைத்திருப்பதால் தனது ஒப்பந்தப் பதிவினை நீக்கம் செய்யுமாறு 03.08.2010 அன்று கோரியிருந்தார். அதன்படி அவரது ஒப்பந்தப் பதிவினை நகராட்சி ஒப்பந்த பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்து உத்தரவிடப்பட்டது என்ற விபரம் நகர்மன்றத்தின் தகவலுக்கு.<br><br>செயல் அலுவலர் குறிப்பு:<br>ஒப்பந்த பதிவினை நீக்கம் செய்ததை மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கலாம</td>
<td>அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>782</td>
<td>பொருள் எண்: 11<br>காயல்பட்டிணம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2010-11ன் கீழ் ஓடக்கரையில் மகளிர் சுயஉதவிக்குழு கட்டிடம் கட்டுதல் மற்றும் கடையக்குடியில் (கொம்புத்துறை) மீனவர் வலைக்கூடம் கட்டுதல் ஆகிய இரண்டு பணிகளுக்கும் முறையே 11.06.2010 மற்றும் 20.07.2010 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப் புள்ளியில் திரு S.குமரேசன் என்பவர் குறைந்த விலைப்புள்ளி கோரியிருந்தார். மேற்படி பணிகளுக்கு முறையே 06.07.2010 மற்றும் 21.07.2010 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது. ஆனால் மேற்படி ஒப்பந்தக்காரருக்கு அரசு வேலை கிடைத்திருப்பதால் அவரது ஒப்பந்தப் பதிவும் அவருக்கு வழங்கப்பட்ட வேலை உத்திரவும் நகராட்சி சட்ட விதிகளுக்குட்பட்டு ரத்து செய்யப்பட்டது. எனவே மேற்க்கண்ட இரண்டு பணிகளுக்கும், மறு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு 20.08.2010 அன்று கோரப்பட்டதில் எவராலும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படாததால் இரண்டாவது அழைப்பாக 31.08.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒரு வேலைக்கு மட்டும் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (இலட்சத்தில்)</th><th>ஒப்பந்தக்காரர் பெயர்/முகவரி</th><th>ஒப்பந்த வகை (மதிப்பீடு ரேட்டுக்கு)</th></tr>
<tr><td>1.</td><td>கடையக்குடியில் மீனவர் வலைக்கூடம் கட்டுதல்</td><td>1.00</td><td>திரு S.பால்ராஜ், கீழக்கரை<br>திருமதி F.முனவ்வரா, காயல்பட்டிணம்</td><td>4.94% கூடுதல்<br>6.74% கூடுதல்</td></tr>
</table></td>
<td>அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டதில் திரு S.பால்ராஜ், கீழக்கரை என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 4.94% கூடுதலாக கோரியுள்ளார். மேலும் அவரது ஒப்பந்தப்புள்ளி அடுத்த ஒப்பந்தப்புள்ளியை விட குறைவாக இருப்பதால் அவரது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம். மேலும் இப்பணி திட்டப்பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று வேலைஉத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்க.<br>செயல் அலுவலர் குறிப்பு:<br>குறைந்த ரேட் கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கலாம். மேலும் இப்பணி திட்டப்பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று வேலைஉத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>783</td>
<td>பொருள் எண்: 12<br>காயல்பட்டிணம் நகராட்சியில் பொதுநிதிப பணிகள் 2010-11ன் கீழ் கீழ்க்கண்ட மூன்று பணிகளுக்கு 25.08.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (இலட்சத்தில்)</th><th>ஒப்பந்தக்காரர் பெயர்/முகவரி</th><th>ஒப்பந்தவகை (மதிப்பீடு ரேட்டுக்கு)</th></tr>
<tr><td>1.</td><td>அருணாச்சலபுரம் மயான இடத்தில் புதியதாக 6அடி விட்டமுள்ள உறை கிணறு அமைத்தல்.</td><td>1.25</td><td>திரு S.பால்ராஜ், கீழக்கரை<br>திரு R.தலவாணிமுத்து காயல்பட்டிணம்</td><td>0.03% குறைவு<br>0.11% கூடுதல்</td></tr>
<tr><td>2.</td><td>சேதுராஜா தெருவில் புதியதாக 6 அடி விட்டமுள்ள உறை கிணறு அமைத்தல்.</td><td>1.25</td><td>திரு S.பால்ராஜ், கீழக்கரை<br>திரு R.தலவாணிமுத்து காயல்பட்டிணம்</td><td>0.03% குறைவு<br>0.11% கூடுதல்</td></tr>
<tr><td>3.</td><td>மங்களவாடி கடற்கரை பொழிமுகத்தில்</td><td>3.00</td><td>திரு R.தலவாணிமுத்து காயல்பட்டிணம்</td><td>0.007% குறைவு</td></tr>
</table></td>
<td>அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>தடுப்பணை கட்டுதல்.</td><td></td><td>திருமதி T.தங்கப்பூ,<br>காயல்பட்டிணம்</td><td>1.07% கூடுதல்</td><td></td></tr>
</table>
வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு சமா்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் குறைந்த விலை கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
செயல் அலுவலா் குறிப்பு:<br>
குறைந்த விலை கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பாா்வையிட்டு அங்கீகரிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>784</td>
<td>
பொருள் எண்: 13<br>
காயல்பட்டிணம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினா் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2010-11ன் கீழ் கீழ்க்கண்ட வேலைக்கு 23.09.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயா்</th><th>மதிப்பீடு (இலட்சத்தில்)</th><th>ஒப்பந்தக்காரா் பெயா்/முகவரி</th><th>ஒப்பந்தவகை (மதிப்பீடு ரேட்டுக்கு)</th><th></th></tr>
<tr><td>1.</td><td>காயல்பட்டிணம் நகராட்சி தைக்காபுரம் மயான சாலை தாா்ச்சாலை அமைத்தல்.</td><td>5.00</td><td>திரு S.பால்ராஜ், கீழக்கரை<br>திருமதி F.முனவ்வரா, காயல்பட்டிணம்</td><td>0.10% குறைவு<br>0.87% கூடுதல்</td><td></td></tr>
</table>
வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த விலை கோரியுள்ள திரு S.பால்ராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் பாா்வையிட்டு அங்கீகரிக்கலாம்.<br>
செயல் அலுவலா் குறிப்பு:<br>
குறைந்த விலை கோரியுள்ள திரு S.பால்ராஜ், கீழக்கரை என்பவா் குறைந்த விலை கோரியிருப்பதால் அவரது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
</td>
<td>அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 785 | **பொருள் எண்: 14**<br>காயல்பட்டிணம் நகராட்சியில் 15வது வார்டுக்குட்பட்ட உச்சினிமாகாளியம்மன் கோவில் தெரு மயான சாலையில் இரண்டு இடங்களில் மழைநீர் செல்லும் வகையில் சிறுபாலம் கட்டவேண்டும் என்ற நகர்மன்ற உறுப்பினர் திரு கணேசன் பால்ராஜ் அவர்களின் வேண்டுகோளின்படி நகராட்சிப் பொறியாளர் மற்றும் பணி மேற்பார்வையாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.50 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>**செயல் அலுவலர் குறிப்பு:**<br>நகராட்சிப் பொறியாளர் மற்றும் பணி மேற்பார்வையாளரால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டை மன்றம் அங்கீகரிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 786 | **பொருள் எண்: 15:**<br>காயல்பட்டிணம் நகராட்சி 15வது வார்டுக்குட்பட்ட உச்சினிமாகாளியம்மன் கோவில் தெரு மயான இடத்தில் புதியதாக உறை கிணறு அமைக்க வேண்டும் என்ற நகர்மன்ற உறுப்பினர் திரு கணேசன் பால்ராஜ் அவர்களின் வேண்டுகோளின்படி நகராட்சிப் பொறியாளர் மற்றும் நகராட்சி பணி மேற்பார்வையாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.00 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும்.<br>**செயல் அலுவலர் குறிப்பு:**<br>நகராட்சி பொறியாளர் மற்றும் பணி மேற்பார்வையாளரால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டை மன்றம் அங்கீகரிக்கலாம | அங்கீகரிக்கப்பட்டது |
| | 787 | **பொருள் எண்:-16**<br>காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சியின் ஜுன், ஜுலை மற்றும் ஆகஸ்ட் - 2010-ம் மாத செலவினங்களை மன்றம் அங்கீகரிக்க.<br><br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>செலவுச் சீட்டுகளை மன்றம் அங்கீகரிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 788 | **பொருள் எண்: 17:**<br>காயல்பட்டணம் நகராட்சி 17-வது வார்டு குத்துக்கல் தெரு மெயிதீன் பள்ளிவாசல் சந்திப்பில் SSVI W-10 மின்கம்பம் போக்குவரத்திற்கு இடையூராக உள்ளது, ஆகவே மேற்படி மின்கம்பத்தை மின்வாரியம் மூலாக அகற்றி போக்கவரத்திற்கு இடையூறு இல்லாத வகையில் மாற்றியமைத்திட கேட்டுக் கொண்ட 17-வது வார்டு உறுப்பினர் திரு.N.M.E.ஜாபர் சாதிக் அவர்கள் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும்.<br>**செயல் அலுவலர் குறிப்பு:**<br>மின்கம்பத்தை மாற்றியமைத்திட மன்றம் தீர்மானிக்கலாம | அங்கீகரிக்கப்பட்டது |
| | 789 | **பொருள் எண்: 18:**<br>காயல்பட்டணம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் உள்ள வணிக வளாக கடை எண்:- 5 ஒப்படைக்கும் நாள் முதல் 31.07.2013 முடிய ஏலம் விடப்பட்டதில் அதிக ஏலத்தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ. 2045.00-க்கு ஏலம் கேட்டுள்ள திரு.M.செந்தில் வேல்முருகன்,13-A,சேதுராஜா தெரு, காயல்பட்டணம் என்பவருக்கு 01.10.2010 முதல் வாடகைக்கு விட மன்றத்தின் முடிவிற்கு<br>**செயல் அலுவலர் குறிப்பு:**<br>அதிக தொகைக்கு ஏலம் கேட்டுள்ள திரு.M.செந்தில் வேல்முருகன், 13-A,சேதுராஜா தெரு, காயல்பட்டணம் என்பவருக்கு வடகைக்கு விட மன்றம் அங்கீகரிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 790 | **பொருள் எண்: 19:**<br>காயல்பட்டணம் நகராட்சியில் கட்டிடவரைவாளராக பதிவு செய்யுமாறு கேட்டுக் கொண்ட ஆ.அப்துல் பாஷித், 9/6,மெயின்ரோடு, எரல் என்பவர் கடிதம் மற்றும் சான்றிதழ் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**செயல் அலுவலர் குறிப்பு:**<br>கட்டிட வரைவாளராக பதிவு செய்திட மன்றம் அங்கீகரிக்கலாம | அங்கீகரிக்கப்பட்டது |
| | | | |